தேசிய மொழித் தகைமை (NLQ ENTRANCE EXAM) மதிப்பீட்டுப் பிரவேசப் பரீட்சை என்றால் என்ன?

- தேசிய மொழித் தகைமை (NLQ) மதிப்பீட்டுப் பரீட்சையில் மொழியறிவு அதி உயர் மட்டத்தில் எதிர்பார்க்கப்படுவதனால் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் தமது அறிவு குறித்த ஏதேனுமொரு மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பின் அவ்வாறானப் பரீட்சார்த்திகள் தேசிய மொழித் தகைமை (NLQ ENTRANCE EXAM) மதிப்பீட்டுப் பிரவேசப் பரீட்சைக்குத் தோற்ற முடியும். அப் பரீட்சைக்குத் தோற்றி பெற்றுக் கொள்ளப்படும் பெறுபேற்றின் அடிப்படையில் (NLQ) பரீட்சைக்குத் தோற்ற வேண்டுமா என்பதைப் பரீட்சார்த்தியே தீர்மானித்தல் வேண்டும். அது குறித்த எந்தவொரு பரிந்துரையும் திணைக்களத்தினால் வழங்கப்பட மாட்டாது.

- 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் 5:1:2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறுவதற்கான எந்தவொரு உரித்தும் இப் பிரவேசப் பரீட்சைக்குத் தோற்றுவதால் மாத்திரம் கிடைக்கப் பெற மாட்டாது என்பதோடு, அது தமது அறிவை மதிப்பீடு செய்வதற்கான ஒரு பரீட்சை மாத்திரமேயாகும்.

| வினாப்பத்திரத்தின் பெயர் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|
| கணனி சார் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 |
| எழுத்து | 01 மணித்தியாலம் | 100 |
| பேச்சு | 15 நிமிடங்கள் | 100 |

கணனி சார் பரீட்சை

- தேசிய மொழி கிரகித்தல் மற்றும் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்ட இப் பரீட்சையின் மூலம் வாசிப்பு, செவிமடுத்தல் போன்ற அடிப்படை மொழி ஆற்றல் குறித்த பரீட்சார்த்தியின் அறிவு மதிப்பீடு செய்யப்படும்.

எழுத்து

- நடைமுறைத் தலைப்பு ஒன்றின் கீழ் கட்டுரையமுதுதல் மற்றும் வரைபு அல்லது தரவுப் பகுப்பாய்வை விபரித்த எழுதுதல் போன்ற இரண்டு பிரிவுகளும் உள்ளடங்குவதோடு, எழுத்துத் திறன் அதன் ஊடாக மதிப்பீடு செய்யப்படும்.

பேச்சு

- ❖ சுய அறிமுகமொன்று பரீட்சார்த்திக்கும் பரீட்சகருக்கும் இடையில் இடம்பெறுவதோடு, பரீட்சகரினால் வழங்கப்பட்ட தலைப்பு அல்லது விபரத்துடன் தொடர்புபட்ட கலந்துரையாடலின் போதான வெளிப்பாட்டு மதிப்பீடு ஊடாக பரீட்சார்த்தியின் பேச்சுத் திறன் மதிப்பீடு செய்யப்படும்.

விண்ணப்பிக்கும் முறை

- ❖ தேசிய மொழித் தகைமை (NLQ ENTRANCE EXAM) மதிப்பீட்டு நுழைவுப் பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூ. 500.00 ஆகும்.

- ❖ பரீட்சை விண்ணப்பங்கள் கீழே பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் அவ் விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் செய்து பெற்றுக் கொண்ட பிரதியைப் பூர்த்தி செய்து குறித்த பரீட்சைக் கட்டணத்தை நாட்டிலுள்ள எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் இலங்கை வங்கி, ராஜகிரிய, அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தின் 7041541 எனும் கணக்கிற்கு வரவு வைத்துப் பற்றுச்சீட்டினை உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். பணம் செலுத்துகையில் வைப்பாளரின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட வேண்டிய இடத்தில் அதற்கு மேலதிகமாக விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் (NLQ ENTRANCE EXAM) எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

- ❖ பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை "அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகம், அரசகரும மொழிகள் திணைக்களம், 341/7, கோட்டே வீதி, ராஜகிரிய" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

- ❖ விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "NLQ ENTRANCE EXAM" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

அவ்வாறில்லையெனில் அரசகரும மொழிகள் திணைக்களத்திற்கு சமுகமளித்து, விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொண்டு அவற்றைப் பூர்த்தி செய்து, பணம் செலுத்தி கையளிக்க முடியும்.